[4th November 1966

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இது பற்றியும் தகவல் சேகரிக்கப்பட்டு வருகிறது. மழை நின்று விடும் என்று நினைத்தேன். ஆனால் மேலும் தொடர்ந்து மழை பெய்கிறது. எல்லாத் தகவலையும் தெரிந்து கொண்டு 7-ஆம் தேதி அல்லது 8-ஆம் தேதி விவரங்களைத் தெரிவிக்க ஒரு ஸ்டேட்மென்ட் ரெவின்யூ அமைச்சர் அவர்களோ அல்லது வேறு யாராவது ஒரு அமைச்சரோ கொடுக்கலாம் என்று நினைக்கிறேன்.

MR. SPEAKER: Consent is withheld.

III.—ANNOUNCEMENTS.

(1) POSTPONEMENT OF CALLING ATTENTION NOTICE.

MR. SPEAKER: Notice under Rule 41 is postponed, because the Minister concerned is absent. It will be taken up tomorrow.

IV.—PRESENTATION OF REPORT.

REPORT OF THE COMMITTEE ON PUBLIC ACCOUNTS ON THE ACCOUNTS OF THE MADRAS STATE HOUSING BOARD FOR 1962–63.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத் தலைவர் அவர்களே, 1962-63-ம் ஆண்டுக்கான தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை குறித்த இக்குழுவின் அறிக்கையை இம்மன்றத்தின் முன் வைக்கிறேன்.

V.—DEMANDS FOR GRANTS FOR EXCESS EXPENDITURE IN 1963–64—PRESENTATION.

MR. SPEAKER: Now the Hon. Chief Minister will present the Demands for Grants for Excess Expenditure.

***கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, 1963-64-ம் ஆண்டின் மிகைச் செலவுக்கான (Excess expenditure) மானியத் தேவைகளின் விவர அறிக்கையை உங்கள் முன் வைக்க விரும்புகிறேன். இவற்றுள், சில மானியங்களின் செலவினங்கள் அந்த ஆண்டுக்கென இறுதியாக அனுமதிக்கப்பட்ட தொகைகளின் அளவுக்குமேல் செலவழிக்கப்பட்டிருப்பதாகக் காணப்பட்டுள்ளன. அச் செலவினங்களை இந்த விவர அறிக்கையில் காணலாம்.

1965-66-ம் ஆண்டின் பொதுக்கணக்குக் குழுவினர் இந்த மிகைச் செலவினங்களைப் பரிசிலனை செய்து, தமிழ் நாடு அரசாங்கத்தின் 1963-64-ம் ஆண்டுக் கணக்குகள் மீதான தங்கள் அறிக்கையின் 22-வது பாராவில், அந்த அறிக்கையின் 7-ம் இணைப்பில் கண்டுள்ள மிகைச் செலவு மானியத் தேவைகளைச் சட்டப் பேரவையின் இசைவிற்காக அதன் முன் வைக்க வேண்டுமெனப் பரிவுரை செய்துள்ளனர். அக் குழுவினரின் கருத்துப்படி 1963-64-ம் ஆண்டின் மிகைச் செலவுகளுக்கான மானியத் தேவைகளை உங்கள் முன் வைக்கிறேன். இந்த விவர அறிக்கையின் இணைப்பில், ஒவ்வொரு செலவினம் குறித்தும் ஏற்பட்ட மிகைச் செலவிற்கான